செ.வெ.எண்:586 நாள்: 11.10.2021

**புதுக்கோட்டை மாவட்டத்தில்**
**கலைஞரின் வரும்முன் காப்போம் திட்டம் மருத்துவ முகாம்கள்**
**12.10.2021 அன்று நடைபெறுகிறது.**

**மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் உத்தரவின்படி, 'கலைஞரின் வரும்முன் காப்போம் திட்டம்' மீண்டும் புதுப்பொலிவுடன் செயல்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒரு வட்டாரத்திற்கு மூன்று மருத்துவ முகாம்கள் வீதம், புதுக்கோட்டை மாவட்டத்தில் 2021-22-ஆம் நிதியாண்டில் 39 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட உள்ளது.

இத்திட்டத்தின் நோக்கம், கிராமங்கள் மற்றும் நகர்புற பகுதிகளுக்கு நேரில் சென்று மருத்துவ வல்லுநர் குழுவினர்களால் மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு பொது மக்களை பல்வேறு நோய்களிலிருந்து தொடக்க நிலையிலேயே கண்டறிந்து மேல்சிகிச்சைக்கு பரிந்துரை செய்து குணப்படுத்துவதாகும். பல்வேறு விதமான நோய்களுக்கு வரும்முன் காப்போம் அணுகுமுறையை மக்களிடையே ஏற்படுத்தி, ஏழை எளிய மக்களுக்கு இலவச பன்முனை மருத்துவ பரிசோதனை மற்றும் சிகிச்சைகள் இம்மருத்துவ முகாம்கள் மூலம் வழங்கப்படுகிறது.

இம்முகாம்களில் மருத்துவ வல்லுநர்கள் அடங்கிய சிறப்பு மருத்துவ குழுவினரால் பொதுமக்களுக்கு குழந்தை நலம், பல் மருத்துவம், கண் காது, மூக்கு, தொண்டை, இருதய நோய் சிகிச்சை, நீரிழிவு நோய் கண்டுபிடிப்பு, புற்றுநோய், காசநோய், மகப்பேறு மருத்துவம், சித்த மற்றும் இந்திய மருத்துவம், மனநல ஆலோசனை போன்ற துறைகளில் நிபுணத்துவம் வாய்ந்த மருத்துவர்களால் வரும்முன் காப்போம் திட்ட மருத்துவ முகாம்கள் நடத்தப்பட உள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்தில், 'கலைஞரின் வரும்முன் காப்போம் திட்டம்' 12.10.2021 அன்று பொன்னமராவதி வட்டாரத்தில், தொட்டியம்பட்டியில் உள்ள லயன்ஸ் மெட்ரிக்குலேசன் பள்ளியிலும், ஆலங்குடி புனித ஆரோக்கியமாதா நடுநிலைப்பள்ளியிலும் தொடங்கப்பட உள்ளது. 12.10.2021 அன்று காலை 7.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை இம்மருத்துவ முகாம் நடைபெறும். பொது மக்கள் அனைவரும் இம்மருத்துவ முகாமில் கலந்துகொண்டு பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**